**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**SOP No. 88/2025**

**நாள்.05.03.2026**

ம.சா.1 திரு.கிருபாகரன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எங்கள் சபையில் Author மற்றும் Founder ஆக பாஸ்டர். எம்.ஜோசப் மோசஸ் என்பவர் இருந்தார் என்றால் சரிதான். அவர் 13.10.2022ம் தேதியிட்ட ஆவண எண்.33/2022 Deed for Declaration of Trust of Kirubasanam Christhuvin sabai எழுதிவைத்த பின்னரும் அவரே Author ஆக செயல்பட்டு வந்தார் என்றால் சரிதான். அவர் இறந்தபின்பு அவரது பெயரில் உள்ள பணம், மனுதாரர் சபைக்கு சேரவேண்டியது என்றும், அதனை பெறுவதற்கு வங்கிக்கு நான் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு 1ம் எதிர்மனுதாரர் வங்கி 10.09.2024ம் தேதி மேற்படி சபையின் நிர்வாக டிரஸ்ட்டிற்கு மேற்படி நபரின் வாரிசுகள் உரிய ஆவணங்களுடன் மனு செய்ய வேண்டும் என்று பதில் அனுப்பினார்கள் என்றால் சரிதான். அதே போல் 10.11.2021 தேதியிட்ட உயிலின் நகலை கொடுக்குமாறு 30.09.2024 தேதியிட்ட கடிதத்தை 1ம் எதிர்மனுதாரர் வங்கி எனது வழக்கறிஞருக்கு அனுப்பினார்கள் என்றால் சரிதான். உரிய ஆவணங்களின் அடிப்படையில் நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவிற்கு 1ம் எதிர்மனுதாரர் கட்டுப்பட்டு செயல்படுவார் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பாஸ்டர். எம்.ஜோசப் மோசஸ் 2ம் எதிர்மனுதாரர் வங்கியில் உள்ள அவரது சேமிப்பு கணக்கிற்கு அவரது சகோதரி முத்துலெட்சுமியை நாமினியாக காட்டியுள்ளார் என்றால் 2ம் எதிர்மனுதாரர் வங்கியில் மட்டும்தான்



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.03.05 16:49:37 +0530

காட்டியுள்ளார். அதனால் பாஸ்டர். எம்.ஜோசப் மோசஸ் எழுதிய உயில் மற்றும் Deed of Declaration of Trust பற்றி 2ம் எதிர்மனுதாரர் வங்கிக்கு தெரியப்படுத்தவில்லை என்றால் நான் தெரியப்படுத்தினேன். அவ்வாறு தெரியப்படுத்தியிருந்தால் நாமினியை மாற்றியிருப்பார்கள் என்றாலும், தெரியப்படுத்தாததால்தான் தற்போது வரை 4ம் எதிர்மனுதாரரை நாமினியாக வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். தற்போதும் இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவுப்படி நடப்பதற்கு 2ம் எதிர்மனுதாரர் வங்கி தயாராக உள்ளது என்றால் சரிதான்.

4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.05 16:49:42 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.